# அலகு III

## காப்பிய இலக்கியம்

சங்க காலத்திற்கும் சங்கம் மருவிய காலத்திற்கும் பிற்பட்ட காலத்தைக் காப்பிய காலம் என இலக்கியவரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிடுவர். நீண்ட நெடுங்கதைகளை முழுமையாகவும் சுவைபடவும் கூறுவன காப்பியங்கள். சங்க இலக்கியங்கள் பெரும்பாலும் தனித்தனிப் பாட்டுகளாகவே உள்ளன. இத்தனிப்பாட்டு நிலை மாறி தமிழில் பெரிய பெரிய காப்பியங்கள் தோன்றுவதற்குச் சமண – பௌத்த சமயங்கள் வித்திட்டன. இதன் விளைவாகச் சிலப்பதிகாரம் முதலான ஐம்பெரும் காப்பியங்களும் பெருங்கதை முதலான பிற காப்பியங்களும் தோன்றின. இவ்வலகில் பண்டைத் தமிழரின் பண்பாட்டைப் புரிந்து கொள்ளும் நிலையில் மணிமேகலையின் முதற்காதையாகிய **விழாவறை காதை** இடம் பெறுகின்றது. கதை சொல்லும் திறனும் கவிதை இயற்றும் திறனும் பாடல்களில் அமையும் கற்பனை, உணர்ச்சி, சந்தம், புனைவு அகிய பண்புகளும் கம்பனின் சிறப்புக்கு எடுத்துக்காட்டாக **நகர் நீங்குபடலம்** அமைந்துள்ளது. சிலப்பதிகாரத்தின் பெருமையையும் காப்பியத் தலைவி கண்ணகியின் பண்பு நலன்களையும் ஆராயும் நிலையில் **கண்ணகி காப்பியம்** என்னும் கட்டுரையும், இங்கு இடம் பெற்றுள்ளது. மேலும்மேலும் காப்பியங்களைப் படித்துச் சுவைக்கவும் மதிப்பிடவும் திறன் பெற இவ்வலகில் அமைந்த பகுதிகள் தூண்டுதலாக அமையும்.

# 6. விழாவறை காதை

ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்று மணிமேகலை. ‘சிலப்பதிகாரம்’ என்னும் முத்தமிழ்க் காப்பியம் தோன்றியதைத் தொடர்ந்து மணிமேகலை தோன்றியது. சிலப்பதிகாரக் கதையின் ஒரு தொடர்ச்சியாகவே இக்காப்பியம் அமைகின்றது. எனவே, சிலம்பையும் மேகலையையும் இரட்டைக் காப்பியங்கள் எனக் குறிப்பிடு வர். பல்வேறு அறக் கருத்துகளை உணர்த்தும் இக்காப்பியம், முப்பது காதைகளைக் கொண்டது. முதல் காதை இங்குப் பாடமாக வந்துள்ளது. மணிமேகலை என்னும் இம்மகாகாவியத்தை இயற்றியவர் மதுரைக் கூலவா ணிகன் சீத்தலைச் சாத்தனார் என்பவர். இளங்கோவடிகளுக்குச் சிலப்பதிகாரக் கதையை எடுத்துரைத்தவர் இவரே என்பதும் குறிப்பிடத்தக்கது.

உலகந் திரியா ஓங்குயிர் விழுச்சீர்ப்
பலர்புகழ் மூதூர்ப் பண்டுமேம் படீஇய
ஓங்குயிர் மலையத் தருந்தவ னுரைப்பத்
தூங்கெயி லெறிந்த தொடித்தோட் செம்பியன்
விண்ணவர் தலைவனை வணங்கிமுன் னின்று
மண்ணகத் தென்றன் வான்பதி தன்னுள்
மேலோர் விழைய விழாக்கோ ளெடுத்த
நாலேழ் நாளினும் நன்கினி துறைகென
அமரர் தலைவன் ஆங்கது நேர்ந்தது
கவராக் கேள்வியோர் கடவா ராகலின்
மெய்த்திறம் வழக்கு நன்பொருள் வீடெனும்
இத்திறந் தத்தம் இயல்பினிற் காட்டும்
சமயக் கணக்கருந் தந்துறை போகிய
அமயக் கணக்கரும் அகலா ராகிக்
கரந்துரு வெய்திய கடவு ளாளரும்
பரந்தொருங் கீண்டிய பாடை மாக்களும்
ஐம்பெருங் குழுவும் எண்பே ராயமும்
வந்தொருங்கு குழீஇ வான்பதி தன்னுள்
கொடித்தேர்த் தானைக் கொற்றவன் துயரம்
விடுத்த பூதம் விழாக்கோள் மறப்பின்
மடித்த செவ்வாய் வல்லெயி றிலங்க,
இடிக்குரல் முழக்கத் திடும்பை செய்திடும்
தொடுத்தபா சத்துத் தொல்பதி நரகரைப்
புடைத்துணும் பூதமும் பொருந்தா தாயிடும்
மாயிரு ஞாலத் தரசுதலை யீண்டும்
ஆயிரங் கண்ணோன் விழாக்கால் கொள்கென
வச்சிரக் கோட்டத்து மணங்கெழு முரசம்
கச்சை யானைப் பிடர்த்தலை யேற்றி
ஏற்றுரி போர்த்த இடியுறு முழக்கின்
கூற்றுக்கண் விளிக்குங் குருதி வேட்கை
முரசுகடிப் பிடூஉம் முதுகுடிப் பிறந்தோன்
திருவிழை மூதூர் வாழ்கென் றேத்தி
வான மும்மாரி பொழிக மன்னவன்
கோள்நிலை திரியாக் கோலோ னாகுக
தீவகச் சாந்தி செய்தரு நன்னாள்
ஆயிரங் கண்ணோன் தன்னோ டாங்குள



நால்வேறு தேவரும் நலத்தகு சிறப்பில்
பால்வேறு தேவரும் இப்பதிப் படர்ந்து
மன்னன் கரிகால் வளவன் நீங்கியநாள்
இந்நகர் போல்வதோர் இயல்பின தாகிப்
பொன்னகர் வறிதாப் போதுவ ரென்பது
தொன்னிலை யுணர்ந்தோர் துணிபொரு ளாதலின்
தோரண வீதியுந் தோமறு கோட்டியும்
பூரண கும்பமும் பொலம்பா லிகைகளும்
பாவை விளக்கும் பலவுடன் பரப்புமின்!
காய்க்குலைக் கமுகும் வாழையும் வஞ்சியும்
பூக்கொடி வல்லியுங் கரும்பும் நடுமின்
பத்தி வேதிகை பசும்பொற் றூணத்து
முத்துத்தாமம் முறையொடு நாற்றுமின்!
விழவுமலி மூதூர் வீதியும் மன்றமும்
பழமணல் மாற்றுமின் புதுமணற் பரப்புமின்!
கதலிகைக் கொடியுங் காழூன்று விலோதமும்
மதலை மாடமும் வாயிலும் சேர்த்துமின்
நுதல்விழி நாட்டத் திறையோன் முதலாப்
பதிவாழ் சதுக்கத்துத் தெய்வமீ றாக
வேறுவேறு சிறப்பின் வேறுவேறு செய்வினை
ஆறறி மரபின் அறிந்தோர் செய்யுமின்
தண்மணற் பந்தருந் தாழ்தரு பொதியிலும்
புண்ணிய நல்லுரை அறிவீர் பொருந்துமின்
ஒட்டிய சமயத் துறுபொருள் வாதிகள்
பட்டிமண் டபத்துப் பாங்கறிந் தேறுமின்
பற்றா மாக்கள் தம்முட னாயினும்
செற்றமுங் கலாமுஞ் செய்யா தகலுமின்
வெண்மணற் குன்றமும் விரிபூஞ் சோலையும்
தண்மணல் துருத்தியுந் தாழ்பூந் துறைகளும்
தேவரு மக்களும் ஒத்துடன் றிரிதரு
நாலேழ் நாளினும் நன்கறிந் தீரென
ஒளிறுவாள் மறவருந் தேரும் மாவும்
களிறுஞ் சூழ்தரக் கண்முர சியம்பிப்
பசியும் பிணியும் பகையும் நீங்கி
வசியும் வளனுஞ் சுரக்கென வாழ்த்தி
அணிவிழா அறைந்தனன் அகநகர் மருங்கென்.

– சீத்தலைச் சாத்தனார்

மணிமேகலை

**விடை காண்போம்**

- புகார் நகரின் சிறப்பைக் கூறுக.
- தூங்கெயிலெறிந்த தொடித்தோட்செம்பியன் – விளக்கம் தருக.
- விழா நடைபெறவில்லையெனில் எத்தகைய துன்பங்கள் ஏற்படும்?
- விழாச் செய்தி அறிவித்த முறையினைக் கூறுக.
- தேவரும் மக்களும் ஒத்து உடன்திரிவர் எங்கு?
- ஐம்பெருங்குழு, எண்பேராயம் பற்றிக் குறிப்பு எழுதுக.
- இந்திரவிழா குறித்து ஒரு கட்டுரை வரைக.



# 7. நகர்நீங்கு படலம்

வடமொழியில் வான்மீகி இயற்றிய இராமாயணத்தைத் தழுவித் தமிழில் கம்பரால் எழுதப்பட்டது கம்பராமாயணம். கம்பராமாயணத்திற்குக் கம்பன் இட்ட பெயர் இராமாவதாரம். 'கல்வியில் பெரியவர் கம்பர்', 'கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும்' எனும் பழமொழிகள் கம்பனின் கவிச் சிறப்பை உணர்த்தும். கம்பராமாயணம் பால காண்டம், அயோத்தியா காண்டம், ஆரணிய காண்டம், கிட்கிந்தா காண்டம், சுந்தர காண்டம், யுத்த காண்டம் எனும் ஆறு காண்டங்களை உடையது. அயோத்தியா காண்டத்தில் நகர் நீங்கு படலத்தின் ஒரு பகுதி இங்குப் பாடமாக அமைந்துள்ளது.

கோசலை இராமன் உரையாடல்

1. குழைக்கின்ற கவரி இன்றிக்,
கொற்ற வெண்குடையும் இன்றி,
இழைக்கின்ற விதி முன் செல்லத்,
தருமம் பின் இரங்கி ஏக,
'மழைக்குன்றம் அனையான் மௌலி
கவித்தனன் வரும்' என்று என்று
தழைக்கின்ற உள்ளத்து அன்னாள்
முன்ஒரு தமியன் சென்றான்.

2. 'புனைந்திலன் மௌலி; குஞ்சி
மஞ்சனப் புனித நீரால்
நனைந்திலன்; என்கொல்?' என்னும்
ஐயத்தாள், நளின பாதம்,
வனைந்த பொன் கழற்கால் வீரன்
வணங்கலும், குழைந்து வாழ்த்தி,
'நினைந்தது என்? இடையூறு உண்டோ
நெடு முடி புனைதற்கு?' என்றாள்.

3. மங்கை அம்மொழி கூறலும், மானவன்
செங்கை கூப்பி, 'நின் காதல் திரு மகன்,
பங்கம்இல் குணத்து எம்பி, பரதனே,
துங்க மாமுடி சூடுகின் றான்' என்றான்.

4. முறைமை அன்றுஎன்பது ஒன்று
உண்டு; மும்மையின்
நிறை குணத்தவன்;
நின்னினும் நல்லனால்;
குறைவுஇலன் எனக்
கூறினள், நால்வார்க்கும்
மறுஇல் அன்பினில்,
வேற்றுமை மாற்றினாள்.

5. என்று, பின்னரும், 'மன்னவன் ஏவியது
அன்று எனாமை, மகனே! உனக்கு அறன்;
நன்று, நும்பிக்கு நானிலம் நீ கொடுத்து,
ஒன்றி வாழுதி, ஊழி பல' என்றாள்

6. தாய்உ ரைத்த சொல் கேட்டுத் தழைக்கின்ற
தூய சிந்தைஅத் தோம்இல் குணத்தினான்
'நாய கன்,எனை நல்நெறி உய்ப்பதற்கு
ஏயது உண்டு,ஓர் பணி' என்று இயம்பினான்.

7. "ஈண்டு உரைத்த பணி என்னை" என்றவட்கு
"ஆண்டுஓர் ஏழினொடு ஏழ்,அகன் கானிடை,
மாண்ட மாதவத் தோருடன் வைகிப்,பின்,
மீண்டுநீ வரல் வேண்டும்" என்றான்.



கோசலை கலக்கம்

8. ஆங்கு,அவ் வாசகம் என்னும் அனல், குழை
தூங்கு தன்செவியில் தொடராமுனம்,
ஏங்கினாள்; இளைத்தாள்; திகைத்தாள்; மனம்
வீங்கினாள்; விம்மினாள்; விழுந்தாள் அரோ.

9. 'வஞ்ச மோ,மகனே! உனை "மா நிலம்
தஞ்சம் ஆகநீ தாங்கு" என்ற வாசகம்?
நஞ்ச மோ!இனி, நான்உயிர் வாழ்வெனோ?
அஞ்சும், அஞ்சும், என் ஆர் உயிர் அஞ்சுமால்!'

இராமன் கோசலைக்கு ஆறுதல் கூறுதல்

10. இத்தி றத்தின் இடர்உறு வாள்தனைக்
கைத்த லத்தின் எடுத்து, 'அருங் கற்பினோய்!
பொய்த் திறத்தினன் ஆக்குதி யோ?புகல்
மெய்த்தி றத்துநம் வேந்தனை, நீ?' என்றான்.

11. சிறந்த தம்பி திருஉற, எந்தையை
மறந்தும் பொய்இலன் ஆக்கி, வனத்திடை
உறைந்து தீரும் உறுதிபெற் றேன்! இதின்,
பிறந்து யான்பெறும் பேறுஎன்பது யாவதோ?

கோசலை வேண்டுகோள்

12. 'ஆகின், ஐய! அரசன்தன் ஆணையால்
ஏகல் என்பது யானும் உரைக்கிலென்;
சாக லாஉயிர் தாங்க வல்லேனையும்,
போகின், நின்னொடும் கொண்ட னைபோக'
என்றாள்.

கோசலை வேண்டுகோளை இராமன் மறுத்துரைத்தல்

13. 'என்னை நீங்கி இடர்க் கடல் வைகுறும்
மன்னர் மன்னனை வற்புறுத் தாது,உடன்
துன்னு கானம் தொடரத் துணிவதோ?
அன்னையே! அறம் பார்க்கிலை ஆம்'
என்றான்.

14. 'வரிவில் எம்பிஇம் மண்அரசு ஆய்,
அவற்கு
உரிமை மாநிலம் உற்றபின், கொற்றவன்
திருவின் நீங்கித் தவம்செயும் நாள், உடன்
அருமை நோன்புகள் ஆற்றுதி ஆம்அன்றே!

15. 'சித்தம் நீதிகைக் கின்றது என்? தேவரும்
ஒத்த மாதவம் செய்துஉயர்ந் தார்அன்றே?
எத்த னைக்குஉள ஆண்டுகள்? ஈண்டு, அவை
பத்தும் நாலும் பகல்அல வோ?' என்றான்.

கோசலை மகனைக் கான் ஏகாது தடுத்த தசரதனிடம் சொல்லுதல்

16. நடந்த கோசலை, கேகய நாட்டுஇறை
மடந்தை கோயிலை எய்தினள்; மன்னவன்
கிடந்த பார்மிசை வீழ்ந்தனள் கெட்டு உயிர்
உடைந்த போழ்தின் உடல் விழுந்தென்னவே.

17. 'பிறியார் பிரிவுஏது?' என்னும்;
'பெரியோய் தகவோ?' என்னும்;
நெறியோ, அடியேன் நிலை? நீ
நினையா நினைவுஏது?' என்னும்;
'வறியோர் தனமே! என்னும்;
தமியேன் வலியே!' என்னும்;
'அறிவோ; வினையோ? என்னும்;
அரசே! அரசே!' என்னும்.

18. 'திரைஆர் கடல்சூழ் உலகின்
தவமே! திருவின் திருவே!
நிரைஆர் கலையின் கடலே!
நெறிஆர் மறையின் நிலையே!
கரையா அயர்வேன்; எனை,நீ,
கருணாலயனே! "எனின்?" ஒன்று
உரையா இதுதான் அழகோ?
உலகுஏழ் உடையாய்!' என்னும்.

தசரதன் புலம்புதல்

19. 'பொன்னின் முன்னம் ஒளிரும்
பொன்னே! புகழின் புகழே!
மின்னின் மின்னும் வரிவில்
குமரா! மெய்யின் மெய்யே!
என்னின் முன்னம் வனம் நீ
அடைதற்கு, எளியேன் அல்லேன்!
உன்னின் முன்னம் புகுவான்
உயர்வா னகம்,யான்' என்றான்.

மன்னனைத் தேற்றி வசிட்டன் சொல்லுதல்

20. ஒன்றோடு ஒன்று ஒன்று ஒவ்வா
உரை தந்து, அரசன் 'உயிரும்
சென்றான் இன்றோடு' என்னும்
தன்மை எய்தித் தேய்ந்தான்,
மென் தோல் மார்பின் முனிவன்,
வேந்தே! அயரேல்; அவனை,
இன்று ஏகாத வண்ணம்
தகைவென் உலகோடு' என்னா.

தசரதன் நிலையும் கோசலை புலம்பலும்

21. முனிவன் சொல்லும் அளவில்,
'முடியும்கொல்?' என்று அரசன்
தனி நின்று உழல் தன் உயிரைச்
சிறிதே தகைவான்; 'இந்தப்
புனிதன் போனால், இவனால்
போகாது ஒழிவான்' என்னா,
மனிதன் வடிவம் கொண்ட
மனுவும் தன்னை மறந்தான்.

22. மெய்யின் மெய்யே! உலகின்
வேந்தர்க்கு எல்லாம் வேந்தே!
உய்யும் வகைநின் உயிரை
ஓம்பாது இங்ஙன் தேம்பில்,
வையம் முழுதும் துயரால்
மறுகும்; முனிவனு டன்நம்
ஐயன் வரினும் வருமால்;
அயரேல்; அரசே! என்றாள்.

வசிட்டன் நடந்தவை உரைத்தல்

23.'கொண்டாள் வரம்இரண்டு, கேகயர்
கோன் கொம்பு; அவட்குத்
தண்டாத செங்கோல்தயர
தனும்தான் அளித்தான்;
"ஒண்தார் முகிலை வனம்போகு"
என்று, ஒருப்படுத்தாள்;
எண்தானும் வேறுஇல்லை;
ஈதுஅடுத்த வாறு' என்றான்.

இராமன் காடு செல்வது கேட்ட மக்கள் துயரநிலை

24. கிள்ளை யொடு பூவை
அழுத; கிளர் மாடத்து
உள்உறையும் பூசை
அழுத; உருஅறியாப்
பிள்ளை அழுத;
பெரியோரை என் சொல்ல?-
'வள்ளல் வனம் புகுவான்'
என்று, உரைத்த மாற்றத்தால்.

25. ஆவும் அழுத; அதன் கன்று
அழுத; அன்றுஅலர்ந்த
பூவும் அழுத; புனல்புள்
அழுத; கள்ஒழுகும்
காவும் அழுத; களிறுஅழுத;
கால் வயப் போர்
மாவும் அழுத; அம்
மன்னவனை மானவே.

26.'மண் செய்த பாவம் உளது'
என்பார்; 'மா மலர்மேல்
பெண் செய்த பாவம் அதனின்
பெரிது' என்பார்;
'புண் செய்த நெஞ்சை, விதி'
என்பார்; 'பூதலத்தோர்
கண்செய்த பாவம்
கடலின் பெரிது' என்பார்.

கம்பராமாயணம் - கம்பர்

**விடை காண்போம்**

- மழைக் குன்றம் அனையான் யார்?
- "மாண்ட மாதவத்தோருடன் வைகி, பின் மீண்டு நீவரல் வேண்டும்" யார் யாரிடம் கூறியது?
- கோசலையின் வேண்டுகோள் யாது? இராமன் அதை மறுத்தது எங்ஙனம்?
- கோசலை - இராமன் உரையாடலின் கருத்தினை விளக்குக.
- 'கொண்டாள் வரம் இரண்டு' -இருவரங்கள் யாவை?
- தசரதன் இராமன்பால் கொண்ட அன்பு தசரதன் புலம்பலில் எவ்வாறு வெளிப்படுகிறது?
- 'தந்தை சொல் மிக்க மந்திரமில்லை' என்ற கூற்றுக்கு இலக்கணமாக விளங்கியவன் இராமன். நிறுவுக.

# 8. கண்ணகி காப்பியம்

'கண்ணகி காப்பியம்' என்னும் இக்கட்டுரையின் ஆசிரியர் அ.கி. பரந்தாமனார். சென்னையில் பிறந்த இவர் சிறந்த பல கவிதைகளையும் இயற்றியுள்ளார். அவற்றுள் 'மறுமலர்ச்சிக் கவிதைகள்' குறிப்பிடத் தக்க நூல். சிறுவர் பாடல்கள் அடங்கிய 'எங்கள் தோட்டம்' என்னும் நூலையும் இவர் படைத்துள்ளார். இதனால் மத்திய அரசின் இலக்கியப் பரிசைப் பெற்றார். 'வாழ்க்கைக் கனல்', 'மதுரை நாயக்கர் வரலாறு', 'புரட்சிக் கவிதைகள்', 'திருக்குறளும் புதுமைக் கருத்துகளும்', 'வரலாற்றுக் கட்டுரைகள்', 'நல்ல தமிழ் எழுத வேண்டுமா?' போன்ற நூல்களையும் இவர் எழுதியுள்ளார். இவருடைய தமிழ்ப்புலமையைப் பாராட்டி மதுரை தமிழ் எழுத்தாளர் மன்றத்தினர் இவருக்குப் 'பைந்தமிழ்ப் பாவலர்' என்னும் பட்டம் சூட்டிப் பாராட்டியுள்ளனர். 'கண்ணகி காப்பியம்' என்னும் பாடப்பகுதி இவருடைய 'பன்னிரு கட்டுரைகள்' என்னும் நூலிலிருந்து எடுத்தாளப்பட்டுள்ளது.

**காப்பியச் சிறப்பு**

தண்டமிழ் மொழியிலுள்ள இனிய காப்பியம், நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் ஆகிய கண்ணகி காப்பியம் என்பதில் ஐயமில்லை. பாரதியார் இக்காப்பியச் சிறப்பை,

"வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து
வான்புகழ் கொண்ட தமிழ் நாடு – நெஞ்சை
அள்ளும் சிலப்பதிகாரம் என்றோர் – மணி
ஆரம் படைத்த தமிழ்நாடு"

என்று பாராட்டி இருப்பதால் நன்கறியலாம்.

இக்காப்பியம், சோழ நாட்டில் பிறந்து பாண்டிய நாட்டில் புகுந்து கணவனை இழந்து, சேர நாட்டில் நுழைந்து தெய்வமான ஒரு மாமணியை, தென்தமிழ்ப் பாவையை, தமிழ்நாடு செய்ததவக் கொழுந்தை, கற்பின் செல்வியை, கண்ணகியை வண்ணத்தமிழால் பாடுவது; மூன்று நாட்டையும் இணைத்துக்கூறும் மேன்மை உடையது; இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழுக்கும் களஞ்சியமாக இலங்குவது; தமிழில் முதற்பெருங்காப்பியமாகத் தோன்றியது. பிற சமயங்களை வெறுக்காத சமரச மனப்பான்மை மிக்க சமண சமயப் பெருங்கவிஞர் இளங்கோவடிகள், சைவர்களும் வைணவர்களும் சக்தி வழிபாடு செய்பவரும் சமணரும் வெறுப்புக் கொள்ளாது விருப்புற்றுக் கற்று மகிழுமாறு இசைக்கலை, நடனக்கலை இவற்றின் பெட்டகமாக இக்காப்பியத்தை இயற்றினார் என்றால் மிகையாகாது. இசைக்கலையை நன்கறிந்த இவர் வேண்டும் என்றே இக்கலைகளைப் பற்றிய செய்திகளை மிகுதியாக இக்காப்பியத்தில் அளவுக்கு மேல் புகுத்தியுள்ளார் என்பது மறுக்கமுடியாத உண்மை.

கவிஞர் பெருந்தகை இக்காப்பியத்திற்குக் கண்ணகி காப்பியம் அல்லது கண்ணகி என்று பெயரிட்டிருக்கலாம்; ஏனெனில், வழுக்கி விழுந்த கோவலனைவிட கற்பிற் சிறந்த கண்ணகியே இக்காப்பியத்திற்குக் கதாநாயகியாக இருக்கத்தக்கவள். சீத்தலைச்சாத்தனார், கணிகையர் குலத்தில் பிறப்பினும் கற்புக்கணிகலனாக ஒழுக்கத்திற் சிறந்து விளங்கிய மணிமேகலையைக் காப்பியத் தலைவியாக வைக்க வில்லையா? அவரைப் போல இவரும் செய்திருக்கலாம். இவர் கோவலன் பெயரையோ, கண்ணகியின் பெயரையோ சூட்ட விரும்பாமல், மதுரைக் காண்டத்திலே மறைந்து போகும் சிலம்பின் பெயரையே வைத்தார்; சிலம்பினால் விளைந்த அதிகாரம் என்று கருதிச் சிலப்பதிகாரம் என்றார். கண்ணகி காப்பியம் என்றால் பொருத்தமாக இருக்கும் என்று கூறுவது தவறாகாது.

**கதை**

கண்ணகி கதை தமிழ்நாட்டில் வழங்கி வந்த கதை. கண்ணகி, சோழ நாட்டில் காவிரி கடலோடு கலக்கும் இடத்திலுள்ள காவிரிப்பூம்பட்டினத்தில் மாநாய்கன் என்ற வணிகச் செல்வனின் குலக் கொழுந்தாய்த் தோன்றினாள். அவள் மிகுந்த அடக்கம் உடையவளாய் இருந்தாள். சிலப்பதிகாரம்,

போதிலார் திருவினாள் புகழுடை வடி(வு)என்றும்
தீதிலா வடமீனின் திறம்இவள் திறம் என்றும்
மாதரார் தொழு(து) ஏத்த வயங்கிய பெருங்
குணத்துக்
காதலாள் பெயர்மன்னும் கண்ணகிஎன்
பாள்மன்னோ

என்று கண்ணகியைப் பாராட்டுகிறது.

அக்காவிரிப்பூம்பட்டினத்திலே உயர்ந்தோங்கு செல்வத்தான் மாசாத்துவான் மகனாவான் கோவலன். இவன் மண்தேய்த்த புகழினான்; பெண்கள் எல்லாம் பாராட்டும் வடிவினன்.

கண்ணகிக்குப் பன்னிரண்டு வயதாக இருந்த போது அவளைப் பதினாறு வயதுடைய கோவலனுக்குப் பெற்றோர்கள் மணம் முடித்து வைத்தார்கள். திருமணம் சிறப்பாக நடைபெற்றது. பெற்றோர்கள் விருப்பப்படி கோவலனும் கண்ணகியும் தனியாகச் சில ஆண்டுகள், ஏறக்குறைய எட்டு ஆண்டுகள், இல்லறம் என்னும் நல்லறத்தை இனிதாக நடத்திவந்தார்கள். இருவரும் இன்பமாகவே வாழ்ந்தனர். இப்படியே என்றும் எப்படி இருக்க முடியும்?

கோவலன் அழகன்; கலைஞன்; யாழ்வாசிக்க நன்கு கற்றவன்; உடல் வலியும் மிக்கவன்; அழகிலும் இன்பக் கேளிக்கையிலும் விருப்பமுள்ளவன். கண்ணகியோ அடக்கமுடையவள்; அறவோர்க்களித்தலும் அந்தணர் ஓம்பலும் துறவோரைப் போற்றலும் தொல்லோர் சிறப்பில் விருந்தினரை உபசரித்தலும் ஆகிய இவற்றில் நாட்டமுள்ளவள்; நாணமும் மடனும் நல்லோர் ஏத்தும் பேணிய கற்பினும் ஆழ்ந்த பற்று மிக்கவள்; அழகனுக்கு அழகியின் மேல் விருப்பமில்லாமல் இல்லை; அழகிய மனைவியின் ஒப்புயர்வற்ற பண்புமீது மதிப்பில்லாமலும் இல்லை. என்றாலும், அவசர புத்தியுடைய கோவலனுக்குக் கலைப்பித்து நிலைகலக்கிவிட்டது.

காவிரிப்பூம்பட்டினத்திலேயே மாதவி என்ற கலைச் செல்வி-கணிகைமாது தனது ஐந்தாம் வயதிலிருந்து ஏழாண்டுகள் வரையிலும் நடனக் கலையை நன்கு பயின்று, பன்னிரண்டு அகவையிலே கண்டோர் பாராட்டும் அழகும் கலைத்திறனும் மிக்கவளாய் விளங்கினாள்.

பன்னிரண்டு வயதிலே மாதவி சோழ மன்னனது அவைக்களத்தில் நடனமாடி ஆயிரத்தெட்டுக் கழஞ்சு பொன்மாலையும் தலைக்கோல் என்ற பட்டமும் பெற்றாள். வழக்கப்படி மாதவியின் தாய் சித்திராபதி, இம்மாலையை ஆயிரத்தெட்டுக் கழஞ்சு பொன் கொடுத்து வாங்குவோருக்கு மாதவி உரியவள் என்று சொல்லி நகர இளைஞர்கள் நடமாடும் வீதியில் விற்பதுபோல் நிற்குமாறு தன் தோழி கூனியை நிறுத்தினாள். கோவலன் மாதவியை முன்னமே பார்த்திருத்தல் வேண்டும்; அவளது கலைத் திறனைக் குறித்துத் தெரிந்திருத்தல் வேண்டும். ஆதலால், அவன் உடனே அம்மாலையை வாங்கினான்; மாதவி வீடு சென்றான்; மனைவியை மறந்தான்.

இருபத்து நான்காவது வயதில் கோவலன் மாதவி பால் நட்புக்கொண்டு, ஏறக்குறைய பதின்மூன்று ஆண்டுகள் அவளோடு வாழ்ந்திருந்தான்; மணிமேகலை என்ற பெண்மகவு பிறந்த போது, பெயர்ச் சூட்டுவிழாவில் பெரும்பொருளை அள்ளித் தானமாகப் பார்ப்பனருக்கும் மற்றையோர்க்கும் வழங்கினான். மாதவியும் கோவலனும் இன்பமாகத்தான் இருந்து வந்தார்கள். ஆனாலும், இவ்வின்ப வாழ்வு நீடிக்கவில்லை.

அவ்வூரில் இந்திரவிழா சித்திரைத் திங்களில் முழுமதி நாளில் தொடங்கி இருபத்தெட்டு நாட்கள் கொண்டாடப் பெறுவதுண்டு. விழாவின் கடைசி நாளில் நகர மக்கள் கடற்கரைக்குப் போய் நீராடி இனிதாக உண்டு மகிழ்வது வழக்கம். கோவலனும், மாதவியுடன் கடற்கரைக்குச் சென்றான். புன்னை மரத்தடியிலே இவர்கள் இனிதமர்ந்திருந்தார்கள். கோவலன் யாழை எடுத்து மீட்டி வேடிக்கையாக வேறொருத்தியின் மீது காதல் கொண்டிருப்பது போலப் பாடல்களைப் பாடினான்.

மாதவியும் யாழைக் கையில் வாங்கி வேடிக்கையாக வேறொருவன் மேல் அன்பு கொண்டிருப்பது போல் பாடல்கள் படினாள். மாதவி பாடிய பாடல்களுள் ஒன்று இது:

"தம்முடைய தண்ணளியும் தாமும்தம் மான்தேரும்
எம்மை நினையாது விட்டாரோ? விட்டகல்க;
அம்மென் இணர அடும்புகாள்! அன்னங்காள்!
நம்மை மறந்தாரை நாம் மறக்க மாட்டேமால்!"

கோவலனுக்குச் சினம்பொங்கி எழுந்தது. உடனே அவன் அவ்விடத்தைவிட்டுத் தன் மனைவி கண்ணகியிடம் வந்து சேர்ந்தான்.

பிரிந்திருந்த அத்தனை ஆண்டுகளும் கண்ணகி கண்ணுக்கு மையிட்டாள் இல்லை; காலுக்குச் சிலம்பணிந்தாள் இல்லை. நெற்றிக்குத் திலகமிட்டாள் இல்லை; மங்கல அணியைத் தவிர மற்ற அணியையும் அணிந்தாள் இல்லை; கணவன் வந்ததும் மகிழ்ச்சி கொண்டாள். கோவலன், "குலந்தரு வான்பொருட் குன்றம் தொலைந்தது; வறுமை வந்து விட்டது; நாணமாக இருக்கிறது" என்றான். நங்கை நகை முகம் காட்டி, "சிலம்புகள் இருக்கின்றன; கொண்டு செல்லுங்கள்" என்றாள். கோவலன், சிலம்பை விற்று மதுரையில் வாணிகம் செய்து பொருள் தேட வேண்டும்; நாளை விடியற்காலை செல்லவேண்டும்; என்னோடு வருக என்றான். மறு நாட்காலை பொழுது புலர்வதற்குமுன் இருவரும் ஒருவரிடமும் சொல்லாது வீட்டை விட்டு புறப்பட்டு விட்டனர். வழியில் கவுந்தியடிகள் என்னும் சமணப்பெண் துறவியைச் சந்தித்தனர். அவ்வம்மையாரும் மதுரைக்குப் புறப்படவே, இருவரும் அவரோடு கூட நடந்து சென்றனர்.

காலையில் கோவலன் மதுரை நகரைச் சுற்றிப் பார்த்துத் திரும்பினான். கவுந்தியடிகளும் கண்ணகியும் சோலையில் இருந்தார்கள். தற்செயலாக மாடலமறையோன் அங்கு வந்தான். கோவலனை முன்னமே அறிந்திருந்ததால் அவனுடைய வீரத்தையும் அன்பையும் பண்பையும் பாராட்டினான். கவுந்தியடிகள் கோவலனையும் கண்ணகியையும் அங்கு வந்த அரண்மனைக்கு நெய், பால், தயிர் ஆகிய இவற்றைக் கொடுத்து வந்த ஆயர்குல மாது மாதரியிடம் அடைக்கலமாக ஒப்படைத்து, அவர்களுக்கு வேண்டிய உதவி புரியுமாறு கூறினார்கள். மாதரி அவர்களை அழைத்துச் சென்று தனி விடுதியளித்து, உணவுப் பொருட்கள் கொடுத்துத் தன் மகள் ஐயையையும் உதவி செய்யுமாறு விடுத்தாள். கண்ணகி மறுநாள் உணவு சமைத்துக் கணவனுக்குப் படைத்தாள். கோவலன் உணவை உண்டு, சிறிது நேரம் மனைவியுடன் அளவளாவிச் சிலம்புகளில் ஒன்றை எடுத்துக் கொண்டு விற்கச்சென்றான். வழியில் அரண்மனைப் பொற்கொல்லனைக் கண்டு அதைக்காட்டினான். அக்கொடியோன் அரசனிடம் போய், "காணாமற்போன சிலம்பைக் களவாடிய கள்வன் அகப்பட்டான்; என் மனையில் உள்ளான்" என்று, அரசியின் சிலம்பைத் தான் திருடியதை மறைப்பதற்குப் பொய் கூறினான். அரசன் நெடுஞ்செழியனோ பொற்கொல்லன் கூறியது மெய் என்று கருதிக் கள்வனைக் கொன்று சிலம்பைக்கொண்டு வருமாறு கட்டளையிட்டான். கோவலன் கொல்லப் பட்டான்.

கண்ணகி, கோவலன் கொலையுண்டது கேட்டுக் கலங்கினாள்; கதறினாள்; கொலைக்களம் சென்று கணவன் உடல் புழுதியில் கிடந்ததைப் பார்த்துத் தழுவி அழுதாள். கோவலன், 'கண்ணே இரு' என்று சொல்லி மறைந்தான். உடனே கண்ணகி சீற்றத்துடன் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் அரண்மனை அடைந்து உண்மையை விளம்பித் தன் சிலம்பின் உள்ளீடு மாணிக்கம் என்று சொல்லி, அதைக் கொண்டுவரச் செய்து உடைத்துக்காட்டி மெய்ப்பித்துத் தன் கணவனுக்கு ஏற்பட்ட பழியைத் துடைத்துக் கற்புக்கரசி ஆனாள். வேந்தன், உடைத்த சிலம்பினின்று தன் மீது தெறித்த மாணிக்கத்தைக் கண்டு,

"பொன்செய் கொல்லன் தன்சொற் கேட்ட
யானோ அரசன்? யானே கள்வன்!
மன்பதை காக்கும் தென்புலம் காவல்
என்முதல் பிழைத்தது; கெடுகஎன் ஆயுள்!"

என உரைத்து உள்ளம் உடைந்து சாய்ந்து மண்மிசை விழுந்து மாய்ந்தான். கோப்பெருந்தேவியோ கணவன் இறந்தது கண்டு குலைந்தனன் நடுங்கி, "கணவன் இழந்தோர்க்குக் காட்டுவது இல்" என்று கூறி மன்னனுடைய இணையடி தொழுது தரைமிசை விழுந்து உயிரிழந்தாள்.



கண்ணகி அரண்மனையில் நடந்த நிகழ்ச்சி களைக் காணாமல், அவ்விடத்தை விட்டகன்று, மதுரை நகரை மும்முறை வலமாகச் சுற்றி வந்து, "யான் அமர் காதலன் தன்னைத் தவறு இழைத்த கோநகர் சீறினேன்" என்று இடப் பக்கத்துக் கொங் கையைத் திருகி எறிந்தாள். ஆடித்திங்களில் பேரி ருட் பக்கத்து அழல் சேர் குட்டத்து அட்டமி ஞான்று மதுரை எரிந்தது. மதுரை மா தெய்வம் கண்ணகி முன் தோன்றி முற்பிறப்புச் செய்தியைக் கூறிற்று. கண்ணகி, கீழ்த்திசை வாயிற் கணவனோடு புகுந்தேன், மேற் றிசை வாயில் வறியேன் பெயர்கிறேன் என்று கூறி இரவு பகலாக வையைக் கரை வழியே மேற்கு நோக்கி ஓடி மலைநாடு அடைந்து, திருச்செங்குன்று ஏறி வேங்கை மர நிழலில் நின்றாள். தேவர்களோடு கோவலன் வானவூர்தியில் வந்தான். கண்ணகியும் அதில் ஏறிச் சென்றாள். ஏறக்குறைய முப்பத்து நான் காவது வயதில் எத்திசையும் வணங்கும் தெய்வ மானாள்.

**சிலம்பு காட்டும் நாகரிகம்**

கண்ணகி காப்பியமாகிய சிலப்பதிகாரத்திலிருந்து பண்டைத் தமிழகத்தின் நாகரிகம், கைத்தொழில், வாணிகம், கலைச்சிறப்பு இன்ன பல நன்கறியலாம். இந்திரவிழா மிகச்சிறப்பாகக் காவிரிப்பூம்பட்டினத்தில் சித்திரைத் திங்களில் இருபத்தெட்டு நாட்கள் நடை பெற்றது. மக்கள் நாகரிக வாழ்க்கை நடத்தினார்கள். அரிய திறன்மிக்க கைத்தொழில்கள் நடைபெற்றன. கப்பல்கட்டும் தொழிலிலும் அக்கால மக்கள் வல்ல வராக விளங்கினார்கள். கடற்கரையில் கலங்கரை விளக்கம் (Light House) கவினுற விளங்கியது. பருத்தி நூலாலும் பட்டு நூலாலும் ஆடைகள் நெய் யப்பட்டன. எலிமயிரால் கம்பளம் நெய்யப்பட்டது.

"நூலினும் மயிரினும் நுழைநூற் பட்டினும்
பால்வகை தெரியாப் பன்னூ (று) அடுக்கத்து
நறுகட்டி செறிந்த அறுவை வீதி"

என்னும் சிலப்பதிகார அடிகளால் இவ்வுண்மை புல னாகிறது. வெண்கலக் கன்னார், தச்சர், கொல்லர், ஓவியக்காரர்கள், சிற்பிகள், மண்பாண்டத் தொழிலா ளர், தையற்காரர், தோல்வேலை செய்பவர், துணி, நெட்டி என்பவற்றால் வாடாமாலை, பொய்க் கொண்டை முதலியவற்றைச் செய்பவர்கள் முதலிய பலவகைத் தொழிலாளர்கள் இருந்தார்கள் என்றும் இந்நூலால் அறியலாம்.

இசையைக் குறித்தும் நடனத்தைப் பற்றியும் பல அரிய செய்திகள் இக்காப்பியத்தில் காணப்படு கின்றன. இசை, நடனம், கூத்து இவற்றின் கருவூல மாக இருக்கிறது இக்காப்பியம். இன்னும் இக்காப்பியத்தில் அரங்கேற்று காதையில் அக்காலத் தில் நடனமேடை எவ்வாறு அமைக்கப்பட்டிருந்தது என்னும் அரிய செய்தியை அறிகிறோம். ஆங்கிலத் தில் ஷேக்ஸ்பியர் காலத்து நாடக அரங்கு எவ்

வாறிருந்தது என்று எழுதுகிறார்கள். நாம் சிலப்பதிகாரக்காலத்து நடன அரங்கு குறித்துத் தெரிந்துகொள்ள வேண்டுவதில்லையா? தெரிந்து கொள்வோம். அரங்கேற்றுக் காதையில் கோல் அளவில் நீளம், உயரம், அகலம் இவை குறிக்கப்பட்டுள்ளன. அவை அடி அங்குலம் என்னும் கணக்கில் இங்குக் குறிப்பிடப்படுகின்றன.

**நடன அரங்கு**

பண்டைக்காலத் தமிழ் மக்கள் கலையுள்ளம் படைத்தவர்கள். ஆதலால், அவர்கள் நல்ல இடத்தில் நடன அரங்கத்தை அழகாக அமைத்திருந்தார்கள் என்று காண்கிறோம். எலும்பும் உமியும் பரற்கற்களும் சேர்ந்திருக்கும் நிலம், களிப்புமண் தரை, உப்புமண் தரை, வழவழப்பான தரை, பொடிமண் தரை இவற்றை நீக்கிக் கோயில், பார்ப்பனர் இருக்கை, பள்ளி, குளம், சோலை ஆகியவை இல்லாத சந்தடியற்ற இடத்தில், ஊருக்கு நடுவில், தேர் ஓடும் தெருக்களுக்கு எதிராக உள்ள உறுதியான தரையில், நடன அரங்கை அமைத்தார்கள். மேலே விதானம் கட்டப்பட்டிருந்தது. நால்வகைப் பூதங்கள் படமாக எழுதி வைக்கப்பட்டிருந்தன. மேற்கட்டில் சித்திரங்கள் எழுதப்பட்டிருந்தன. முத்துகளாலும் மலர்களாலும் தொடுக்கப்பட்ட அழகியமாலைகள் மேடையின் மேற்கட்டிலிருந்து தொங்கின. உள்ளே புகவும் வெளியே வரவும் இரண்டு வாயில்கள் இருந்தன. தூண்களின் நிழல் மேடையிலும் அவைக்களத்திலும் படாமல் வெளியே விழும்படி நிலை விளக்கு மேடையில் ஏற்றி வைக்கப்பட்டிருந்தது. ஒருமுக எழினியும் பொருமுக எழினியும் கரந்துவரல் எழினியும் தொங்கவிடப்பட்டிருந்தன. ஒருமுக எழினி என்பது திரையாக விடப்படுகின்ற திரைச்சீலை, பொருமுக எழினி என்பது இரண்டு பக்கத்தினின்றும் வந்து ஒன்றாகப் பொருந்தும்படி விடப்படுகின்ற இரட்டைத் திரைச் சீலையாகும். கரந்துவரல் எழினி என்பது மேலே மறைவாகக் கட்டியிருந்து பின் தொங்க விடப்படுகின்ற திரைச்சீலை. இப்படி அழகாக மாதவி நடனம் செய்த அரங்கு அமைக்கப்பட்டிருந்தது.

கண்ணகி காப்பியத்தை, நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரத்தைக் கற்று இன்புறுக.

**– பேராசிரியர் அ.கி. பரந்தாமனார்**

**விடை காண்போம்**

- ‘சிலப்பதிகாரத்தின்’ பெயர்க் காரணத்தை ஆராய்க.
- கோவலன் கொலையுண்ட காரணத்தை எழுதுக.
- நடன அரங்கின் அமைப்பை வருணிக்க
- கோவலன் கொலையுண்ட செய்தியை அறிந்த கண்ணகியின் செயல்களை விவரிக்க.

## கற்றல் செயல்பாடுகள்

### ❖ அகராதி பார்த்துப் பொருள் எழுதுக

- கரந்து
- பாடை
- குழீஇ
- எயிறு
- கச்சை
- பிடர்த்தலை
- சமயக்கணக்கர்
- துன்னு
- மறுகும்
- பூதலம்
- தேம்புதல்
- ஈரம்
- கவின்
- விதானம்
- செற்றம்
- துருத்தி
- மா
- வசி
- கலாம்
- மேம்படீஇய
- கொற்றம்
- மௌலி
- குஞ்சி
- நளினம்
- பெட்டகம்
- மையல்
- தொல்லோர்
- கோட்டி
- பொலம்
- தூங்கெயில்
- அருந்தவன்
- பாலிகை
- தாமம்
- நுங்கம்
- ஊழி
- பூவை
- சித்தம்
- அகவை
- விளம்பு
- கழஞ்சு

### ❖ ஒரு பொருள் பன்மொழி தருக

- வண்ணம்
- மெய்
- ஆதி
- கொம்பு
- மா
- முதல்

### ❖ அடுக்குத்தொடர் அறிவோம்

- பாடப்பகுதியில் வரும் அடுக்குத் தொடர்களைக் கண்டுபிடித்து எழுதுக.

**மாதிரி** : அஞ்சும் அஞ்சும்

### ❖ உவமைத்தொடர் அறிவோம்

- பாடப்பகுதியில் அமைந்த உவமைத் தொடரை அறிந்து எழுதுக.

**மாதிரி** : மழைக்குன்றம் அனையான்

### ❖ இடஞ்சுட்டிப் பொருள் விளக்குவோம்

- ‘இடையூறு உண்டோ நெடுமுடி புனைதற்கு?’
- ‘மாநிலம் தஞ்சம் ஆக நீ தாங்கு’
- ‘நாலேழ் நாளினும் நன்கினி துறைக’
- ‘மடித்த செவ்வாய் வல்லெயிறிலங்க
  இடிக்குரல் முழங்கத் திடும்பை செய்திடும்’
- ‘வான மும்மாரி பொழிக மன்னவன்
  கோள்நிலை திரியாக் கோலோனாகுக’

### ❖ நயம் பாராட்டுவோம்

- ‘பொன்னகர் வறிதாப் போதுவ ரென்பது
  தொன்னிலை யுணர்ந்தோர் துணிப்பொருள்’
- ‘பற்றா மாக்கள் தம்முடன் ஆயினும்
  செற்றமுங் கலாமுஞ் செய்யா தகலுமின்’
- ‘பசியும் பிணியும் பகையும் நீங்கி
  வசியும் வளனுஞ் சுரக்க’
- ‘கண் செய்த பாவம் கடலின் பெரிது’
- ‘உரு அறியாபிள்ளை அழுத; பெரியோரை என் சொல்ல’

### ❖ பிரித்தறிவோம்

- தண்டமிழ்
- நால்வகை
- பரற்கற்கள்
- பெருங்காப்பியம்
- மரத்தடி
- கீழ்த்திசை

### ❖ சொற்றொடர் குறிப்பு அறிவோம்

- ஓங்குயிர் மலையத் தருந்தவன்
- ஆயிரங் கண்ணோன்
- நுதல் விழி நாட்டத் திறையோன்

### ❖ எனது குறிப்பேடு

- இப்பாடப்பகுதியில் வரும் கதைப்பகுதியைச் சுருக்கிச் சொந்த நடையில் எழுதி வகுப்பில் படிக்கவும்.
- இப்பாடப்பகுதியில் உங்களுக்குப் பிடித்த 5 பாடல்களை மனப்பாடம் செய்து ஏன் பிடித்தது என்பதற்கான குறிப்பையும் எழுதுக.
- ஐம்பெருங் காப்பியங்கள் குறித்த செய்திகளைத் திரட்டி ‘எனது குறிப்பேட்டில்’ எழுதுக.
- உங்களுக்குப் பிடித்த மணிமேகலை அடிகள் 12ஐ மனப்பாடம் செய்து ஏன் பிடித்தது என்ற குறிப்புடன் ‘எனது குறிப்பேட்டில்’ எழுதுக.

### ❖ எனது நூலகக் குறிப்பேடு

- விழாக்காலங்களில் பாடப்படும் பாடல்களைத் திரட்டி வந்து ‘எனது நூலகக் குறிப்பேட்டில்’ எழுதுக.

### ❖ எனது படைப்பாற்றல் ஏடு

- சிலம்பில் உங்களுக்குப் பிடித்த கதாபாத்திரம் யார்? ஏன்? என்பதற்கான குறிப்புகளை எழுதி அவற்றை வகுப்பறையில் படிக்க.

- சிலப்பதிகார கதையின் ஒரு பகுதியை நாடகமாக மாற்றி எழுதுக.
- 'விழாவறை காதை' வாயிலாக அறியலாகும் அக்கால நம்பிக்கைகளையும் விழாக் கொண்டாடும் முறைகளையும் குறித்து ஒரு கட்டுரை வரைக.
- பூதங்கள் இடம்பெறும் நாட்டுப்புறக் கதைகளைத் திரட்டி ஒரு புதுக்கதை எழுதுக.

❖ **ஓவியம் தீட்டுவோம்**

- பாடல் வரிகளுக்கு ஏற்றாற் போல் ஓவியம் தீட்டுக.
  வெண்மணற் குன்றமும் விரிபூஞ்சோலையும் தண்மணல் துருத்தியும் தாழ் பூந்துறை களும் நிறைந்த ஒரு காட்சியை ஓவியமாகத் தீட்டுக.
- மணிமுடி துறந்து மரவுரி தரித்த இராமனின் கோலத்தை ஓவியமாகத் தீட்டுக.

❖ **உரையாடுவோம்**

- பழங்கால விழாக்களோடு தற்கால விழாக்களை ஒப்பிட்டு உரையாடுக.

❖ **கட்டுரை எழுதுவோம்**

- காப்பியம் என்னும் தலைப்பில் சிறு கட்டுரை ஒன்று எழுதுக.

❖ **திறனாய்வு செய்வோம்**

- பாடப்பகுதியில் இராமன் கோசலையைப் பார்த்து 'மெய்த்திறத்து நம் வேந்தனைப் பொய் திறத்தினன் ஆக்குதியோ' எனக் கூறியதைக் குறித்துத் திறனாய்வு செய்க.

❖ **வடிவ மாற்றம் செய்வோம்**

- பாடப்பகுதியைக் கதை வடிவாக,
- பாடப்பகுதியை நாடக வடிவாக,
- பாடப்பகுதியை உரையாடலாக- மாற்றி உங்கள் வகுப்பறையில் வாசியுங்கள்.

❖ **சொற்பொழிவு ஆற்றுவோம்**

முன் வகுப்புகளில் படித்த பாடங்களின் அடிப்ப டையில் கீழ் வரும் தலைப்புகளில் சொற்பொழிவு நிகழ்த்துக.

- கைகேயி குற்றவாளியே!
- தசரதன் குற்றவாளியே!
- கூனியின் பேச்சுத்திறன்!

❖ **கையெழுத்து இதழ் தயாரிப்போம்**

- 'கல்வியில் பெரியவன் கம்பன்' எனும் தலைப் பில் கவிதைகள் எழுதி வாசியுங்கள். சிறந்த கவிதைகளைக் கையெழுத்து இதழில் வெளியிடுக.

❖ **இலக்கணக் குறிப்பு எழுதுவோம்**

- மாமுடி
- குமரா!
- நெடுஞ்சுரம்
- விழுந்தாள்

❖ **வாசித்து மகிழ்வோம்**

- பஞ்சியொளிர் விஞ்சுகுளிர் பல்லவம் அனுங்கச்
  செஞ்செவிய கஞ்சநிமிர் சீறடியள் ஆகி
  அஞ்சொலிள மஞ்ஞையென அன்னமென மின்னும்
  வஞ்சியென நஞ்சமென வஞ்சமகள் வந்தாள்.
- வண்மை இல்லைஓர் வறுமை இன்மையால்
  திண்மை இல்லைநேர் செறுநர் இன்மையால்
  உண்மை இல்லைபொய் உரைஇ லாமையால்
  ஒண்மை இல்லைபல் கேள்வி ஓங்கலால்.
- ஒரு மாணவனுக்கு ஐந்து பாடல் வரிகள். தொடர்ந்து வாசிக்கட்டும். இரண்டாவது சுற்றில் முதல் ஐந்து வரிகளை வாசிக்கும் அதிர்ஷ்டசாலி யார்? வாசிக்கத் தொடங்குங்கள்.

**வாசித்துக் கருத்தறிவோம்**

வால்மீகி இயற்றிய ஆதிகாவியத்தை ஒட்டிக் கம்பர் தம்காப்பியத்தைப் படைத்த போதிலும், கம்பராமாயணம் மொழிபெயர்ப்பும் அல்ல; வெறுந் தழுவலும் அல்ல. ஒரு புதுக்காப்பியம் போலவே விளங்குமாறு கம்பர் தம் கற்பனைத் திறத்தால் படைத்துத் தந்துள்ளார். வால்மீகியால் உயர்ந்த காப்பியத் தலைவர்களாகப் படைத்துக் காட்டப் பட்ட இராமனும் சீதையும், கம்பராமாயணத்தைக் கற்பவர் கேட்பவர்களின் நெஞ்சில் தெய்வங்களா கக் காட்சியளிக்கின்றனர். குமரகுருபரர் என்னும் தமிழ்நாட்டுத் துறவியார் கங்கைக் கரையில் கம்ப ராமாயணக் கதையைப் பரப்பினார் என்றும், அது அங்கே பரவிய பிறகு, இந்தியில் துளசிதாசர் இரா மாயணம் இயற்றினார் என்றும் கூறுவர். தமிழர் வாணிகத்தின் காரணமாக இந்தோனேசியா, தாய் லாந்து, சயாம் முதலிய பல நாடுகளுக்குப் பல நூற்

றாண்டுகளுக்கு முன்னரே சென்று வந்தபோதும், அங்கேயே பலர் குடியேறியபோதும், கம்பராமாய ணக் கதைப்பகுதிகள் அங்குப் பரவின. இன்றும் அங்கே கம்பராமாயணத்தை ஒட்டி அமைந்த கதைகளும் சிற்பங்களும் வாழ்கின்றன.

வால்மீகி இராமாயணத்தில் உள்ள பலவற் றைக் கம்பர் தம் காவியத்தில் அவ்வாறே தந்துள் ளார். சிலவற்றை விரிவாக்கி எழுதியுள்ளார். வால் மீகி கூறாத சிலவற்றைத் தாமே படைத்துத் தந் துள்ளார். ராமகதையைத் தமிழகத்துக்கு ஏற்பச் சமைத்து கல்வியில் பெரியவனானார்.

**விடைகாண்போம்**

- கங்கைக் கரையில் இராமாயணக் கதையைப் பரப்பியவர் யார்?
- இராமனையும் சீதையையும், வால்மீகியும் கம்ப ரும் எவ்வாறு படைத்துக் காட்டுகின்றனர்?
- ஆதிகாவியம் எனப்படுவது யாது?
- இராமாயணம் பரவிய பிறநாடுகள் எவை?

**தொடர் கருத்தறிவோம்.**

- மணிமேகலையில் இந்திரவிழா பற்றிய செய் திகள் வந்துள்ளன. இந்திரவிழா பற்றிய விரி வான செய்திகள் சிலப்பதிகாரத்திலும் இடம் பெறுகின்றன. ‘இந்திரவிழவூரெடுத்த காதை’ என்ற ஒரு தனிக் காதையில் இச்செய்திகள் பற்றிப் பேசுகின்றார் இளங்கோவடிகள்.
- பழங்காலத்தில் அரசர்களும் பெரியோர்க ளும் மக்களுக்குத் தெரிவிக்க வேண்டிய செய்திகளை, யானை மீது இருந்து முரசு கொட்டி அறிவிக்கச் செய்வது வழக்கம். சிலப்பதிகாரத்தில் கண்ணகி – கோவலன் திரு மணச் செய்தியும் இவ்வாறுதான் அறிவிக்கப் பட்டது.

**“இருபெருங் குரவரும் ஒருபெரு நாளில்**
**மணவணி காண மகிழ்ந்தனர் மகிழ்ந்துழி**
**யானை யெருத்தத்து அணியிழையார்**
**மேலிரீஇ**
**மாநகர்க் கீந்தார் மணம்”**

(சிலம்பு 1:40–44)

என இச்செய்தி சிலப்பதிகாரத்தில் கூறப்படுகின் றது. இதே போன்றே மணிமேகலையிலும் இந் திரவிழாச் செய்தி ஊர் மக்களுக்கு அறிவிக்கப் படுகின்றது. இவ்விரு செய்திகளையும் ஒப்பிட்டு நயமுணர்க.

**நளவெண்பா**

இராமன் காட்டிற்குச் செல்லும் காட்சியைக் கம்பர் உருக்கமாக வருணிப்பதுபோல் நளனும் தமயந்தியும் தம் அரண்மனையை விட்டு வெளி யேறும் காட்சியைப் புகழேந்திப் புலவர் நள வெண்பாவில் உருக்கமாக விவரிக்கிறார்.

நளனது வரலாற்றை வெண்பாக்களால் கூறும் நூல் நளவெண்பா. இது சுயம்வர காண் டம், கலித்தொடர் காண்டம், கலி நீங்கு காண் டம் என்னும் மூன்று காண்டங்களைக் கொண் டது. இந்நூலில் 427 வெண்பாக்கள் உள்ளன. சூதாடுதலின் தீமைகளை விளக்கும் இக்கதை மகாபாரதத்திலுள்ள கிளைக்கதைகளுள் ஒன் றாகும்.

இந்நூலை இயற்றியவர் புகழேந்திப் புலவர். இவர் தொண்டை நாட்டிலுள்ள பொன் விளைந்த களத்தூரில் பிறந்தவர். கி.பி. 11 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர். வரகுண பாண்டிய னின் அவைக்களப் புலவராக இருந்தார். சந் திரன் சுவர்க்கி என்னும் குறுநில மன்னனால் ஆதரிக்கப்பெற்று அவனது வேண்டுகோளுக்கி ணங்க நளவெண்பாவை இயற்றினார்.

நிடத நாட்டு மன்னனான நளன் நற்பண்பு களை உடையவன். நளன், தமயந்தி திருமணத் தால் அவர்கள் மீது பொறாமை கொண்ட கலி (சனி) என்பவன் நளன் மனத்தைத் தன் சூழ்ச் சியால் மாற்றிச் சூதாட வைக்கிறான். சூதாட் டத்தில் அனைத்தையும் இழந்து நளன், தன் மனைவியுடன் நாட்டை விட்டு நீங்குகிறான். இவ்வுருக்கமான காட்சி, கம்ப ராமாயணத்தில் இடம்பெறும் இராமன் சீதையோடு காட்டுக்குப் போகும் காட்சிக்கு நிகரானது.

**மென்கால் சிறை அன்னம் வீற்றிருந்த மென்மலரைப்**
**புன்காகம் கொள்ளத்தான் போனாற்போல் – தன்கால்**
**பொடி ஆடத் தேவியொடும் போயினா னன்றே**
**கொடியானுக்(கு) அப்பார் கொடுத்து.**

**வேலை கரைஇழந்தால் வேத நெறிபிறழ்ந்தால்**
**ஞாலம் முழுவதும் நடுவிழந்தால் – சீலம்**
**ஒழிவரோ செம்மை உரைதிறம்பாச் செய்கை**
**அழிவரோ செங்கோல் அவர்.**

**தூயதன் மக்கள் துயர்நோக்கிச் சூழ்கின்ற**
**மாய விதியின் வலிநோக்கி – யாதும்**
**தெரியாது சித்திரம்போல் நின்றிட்டான் செம்மை**
**புரிவான் துயரால் புலர்ந்து.**

**பெரியபுராணம்**

ஐம்பெருங்காப்பியங்களையும் ஐஞ்சிறுகாப்பியங்களையும் தொடர்ந்து சமயம் சார்ந்த பக்தி காப்பியங்கள் தமிழில் தோன்றின. தமிழ் நாட்டில் சோழர் ஆட்சிக் காலத்தில் (கி.பி. 10 முதல் 12 –ஆம் நூற்றாண்டு வரை) இவை முக்கியத்துவம் பெற்றன. கம்பராமாயணமும் பெரிய புராணமும் இக்காலகட்டத்தில் தோன்றிய சிறந்த பக்திக் காப்பியங்களாகும். இவற்றுள் பெரிய புராணத்தை இயற்றியவர் சேக்கிழார். இவர் சோழ அரசன் குலோத்துங்கனின் அமைச்சராக இருந்து பிறகு சைவ சமயத் தொண்டிற்காகவே தம் வாழ்க்கையை அமைத்துக் கொண்டவர். கி.பி. 9–ஆம் நூற்றாண்டில் நம்பியாண்டார் நம்பி என்பவர் நாயன்மார்களின் வாழ்க்கை பற்றிய குறிப்புகளை அமைத்துத் திருத்தொண்டர் திருவந்தாதி என்னும் சிறிய நூல் ஒன்றை இயற்றினார். அக்குறிப்புகளை விரிவுபடுத்தி நாலாயிரத்துக்கும் மேற்பட்ட செய்யுள்களால் 63 நாயன்மார்களைப் பற்றிப் பெரியபுராணம் என்னும் காப்பியத்தை இயற்றினார். இவர் பிறகாப்பிய ஆசிரியர்கள் போல் கற்பனைகளைக் கூட்டிக் காப்பியத்திற்கு அழகு ஊட்ட முயலவில்லை. நாயன்மார் வாழ்ந்த ஊர்களுக்கு நேரில் சென்று அவ்விடங்களில் செவி மரபாக வழங்கிய வரலாற்றுச் செய்திகளைத் தொகுத்து அவற்றின் அடிப்படையில் பெரியபுராணத்தைப் பெருநூலாக எழுதினார். ஆகவே, இடைக்காலத் தமிழக மக்களின் பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள், விருப்பு வெறுப்புகள் ஆகியவற்றை வரலாற்றுப் போக்கில் அறிவதற்கு இந்நூல் உதவுகிறது. பெரியபுராணம் பக்திச் சுவை நிரம்பிய காவியம். சேக்கிழாரின் கவித்திறனைப் பாராட்டி, மீனாட்சி சுந்தரம் பிள்ளை சேக்கிழார் பிள்ளைத்தமிழ் என்னும் நூலில், 'பக்திச் சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய கவி வலவ' என அவரைச் சிறப்பித்துக் கூறுகிறார்.

பெரியபுராணத்தில் காணப்படும் செய்யுள்கள் விருத்தப் பாக்களால் அமைந்தவை; தெளிவானவை, சேக்கிழாரின் நெஞ்சில் குடிகொண்டிருந்த நேர்மையும் நாகரிகமும் எளிமையும் செம்மையும் நூலின் செய்யுள்களிலும் காணப்படுகின்றன. தம் சொந்த கற்பனைகளுக்குச் சிறிதும் இடம் வைத்துக் கொள்ளாமல் தம் ஆராய்ச்சிக்கு எட்டிய உண்மைகளை மட்டும் விளக்கிச் செல்வதே தம் கடமையாகக் கொண்டுள்ளார். இக்காரணத்தால் காப்பியச் சுவை விஞ்சி நிற்காவிட்டாலும் காப்பியத்திற்குரிய எல்லா அமைப்பும் கொண்டு விளங்குகிறது. பெரியபுராணம், காட்டும் சிவனடியார்களின் பெருமைக்கு எடுத்துக் காட்டாக ஒரு பாடலைக் காணலாம்.

பெருமையால் தம்மை ஒப்பார் பேணலால் எம்மைப் பெற்றார்
ஒருமையால் உலகை வெல்வார் ஊனமேல் ஒன்றும் இல்லார்
அருமையாம் நிலையில் நின்றார் அன்பினால் இன்பர் ஆர்வார்
இருமையும் கடந்து நின்றார் இவரை நீ அடைவாய் என்று.

❖ **ஐஞ்சிறுகாப்பியங்கள் அறிவோம்**

- உதயகுமார காவியம்
- நாககுமார காவியம்
- யசோதர காவியம்
- நீலகேசி
- சூளாமணி

❖ **செயல்திட்டம்**

- **இலக்கிய வரலாறு எழுதல்**

பாடநூலிலுள்ள வரலாற்றுக் குறிப்புகளைப் படித்தும், நூலகம் சென்று இலக்கிய வரலாற்று நூல்களை படித்தும் ஆசிரியர்களிடம் கேட்டும் ஒரு குறிப்பிட்ட காலத்தின் இலக்கிய வரலாறு எழுதுக.

**இலக்கண விளக்கம் பெறுவோம்**

**வினாவெழுத்து**

எவன்? யாது? ஏது?

இவற்றுள் **எ, யா, ஏ** என்பன சொல்லின் அகத்தே நின்று வினாப்பொருள் தருதலின் அகவினா எனப் படும்.

அவனா வந்தான்?

யானோ அரசன்?

ஈரம் உண்டே?

இவற்றுள் **ஆ, ஓ, ஏ** என்பன சொல்லின் புறத்தே நின்று வினாப்பொருள் தருதலின் புறவினா எனப்படும்.

எ, யா, ஆ, ஓ, ஏ என்பன ஐந்தும் வினா எழுத்துக்கள் ஆகும்.

**அணி**

'அணி' என்னும் சொல்லுக்கு அழகு என்பது பொருளாகும். செய்யுளைச் சொல்லாலும் பொருளாலும் அழகு பெறச் செய்தலின் அணியென்று வழங்கப்படும். செய்யுளில் அமையும் அணி கற்பவருக்கு இனிய உணர்வினை உண்டாக்கும்.

உவமை முதலான பல அணிகளை முன் வகுப்புகளில் கற்றோம். இவ்வகுப்பில் மேலும் சில அணிகளைக் கற்போம். அவையாவன:

1. வேற்றுப்பொருள்வைப்பணி,
2. வஞ்சப்புகழ்ச்சி அணி
3. நிரல்நிறை அணி
4. மடக்கணி
5. வேற்றுமையணி

❖ **வேற்றுப்பொருள்வைப்பணி**

கவிஞர் தாம் கூற விரும்பும் சிறப்புப் பொருளை உலகம் அறிந்த பொதுப்பொருளின் மூலம் வலியுறுத்துவது 'வேற்றுப்பொருள்வைப்பணி' ஆகும்.

(எ.டு) உரைமுடிவு காணான் இளமையோன் என்ற
நரைமுது மக்கள் உவப்ப - நரைமுடித்துச்
சொல்லால் முறைசெய்தான் சோழன்
குலவிச்சை
கல்லாமல் பாகம் படும். (பழமொழி நானூறு)

இச்செய்யுளில் 'குலத்திற்குரிய கல்வி, கல்லாமலே இயல்பாக அமையும்' என்பது பொதுப்பொருள். இப்பொருள் கொண்டு 'மிகவும் இளையவனான கரிகாலன் நீதியை வழங்குவானோ' என ஐயுற்ற நரைமுது மக்கள் மனம் மகிழும்படி, அவர்கள் அறியா வண்ணம் நரைமுடி சூடி முதியவனாய் வேடம் பூண்டு நீதி வழங்கினான் என்ற சிறப்புப் பொருளைப் புலவர் விளக்கியுள்ளார். ஆகவே, இச்செய்யுளில் அமைந்த அணி 'வேற்றுப்பொருள் வைப்பணி' ஆகும்.

❖ **விடை காண்போம்**

- வினாவெழுத்து என்றால் என்ன? விளக்குக.
- வேற்றுப்பொருள் வைப்பணியைச் சான்றுடன் விளக்குக.
- உங்கள் பாடப் பகுதியிலிருந்து வினாயெழுத்து வகைகளுக்கு எடுத்துக்காட்டுகள் தருக.

ஒத்த நிகழ்ச்சிகளை எழுதுவோம்

கோவலனை இழந்த புகார் நகரம் இராமனை இழந்த அயோத்தி நகரைப் போல் இருந்தது என்ற செய்தி சிலப்பதிகாரத்தில் வருகின்றது. "அருந்திறல் பிரிந்த அயோத்தி போலப் பெரும் பெயர் மூதூர் பெரும் பேறுற்றது" என்கிறார் இளங்கோவடிகள்.

இவை போன்று ஒத்த கருத்துள்ள நிகழ்ச்சிகளை அறிந்திருப்பீர்களல்லவா? இரண்டினை எழுதுக.